## சேலம் கல்வராயன் மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளியில் பயின்று -

# சென்னை - ஐ.ஐ.டி.யில் பயில வாய்ப்பு பெற்ற ஏழை மாணவி, ஆ.இராஜேஸ்வரி!

### ‘உயர்கல்விச் செலவை அரசு ஏற்கும்’ என அறிவித்து - சேலத்தில் நேரில் அழைத்துப் பாராட்டிய முதல்வர் -

### அரசு சார்பில் வீட்டுக்கான ஆணையும் வழங்கினார்! மாணவி ராஜேஸ்வரி நன்றி!

**சென்னை, ஜூன் 15– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் கல்வராயன் மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று அகில இந்திய தேர்வில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள ஏழை மாணவி ஆ.ராஜேஸ்வரியை சேலம் நிகழ்ச்சியின்போது நேரில் அழைத்துப் பாராட்டினார்! அவரது உயர்கல்விச் செலவை அரசு ஏற்கும் என்றும் அரசு சார்பில் வீடு ஒன்று வழங்குவதாகவும் அறிவித்து ஆணைகள் வழங்கி வாழ்த்தினார்!**



சேலம், கருமந்துறை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று அகில இந்திய தேர்வில் தேர்ச்சி பெற்று IIT சென்னையில் உயர்கல்வி பயில தகுதிப் பெற்று சாதனை படைத்துள்ள கல்வராயன்மலை கருமந்துறை பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி.ஆ.ராஜேஸ்வரி.

முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர் கல்வியில் சிறந்து விளங்கிடும் வகையில் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் உள்ளிட்ட பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பெண் கல்வி முன்னேற்றத்திற்காக புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் சிறப்பான இத்திட்டங்களின் பலனாக அனைத்துத் தரப்பு மாணவ, மாணவியர்களுக்கும் சிறப்பான கல்வி வழங்கப்பட்டு வருவதுடன், தேசிய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவீதம் என்ற அளவில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

சேலம் மாவட்டம், கல்வராயன் மலையை சேர்ந்த கருமந்துறை, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியில் பயின்ற ஆ.ராஜேஸ்வரி என்ற பழங்குடியின மாணவி அண்மையில் நடைபெற்ற ஜே.இ.இ. தேர்வில் அகில இந்திய அளவில் 417 வது இடத்தில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் உயர்கல்வி பயில தகுதி பெற்றுள்ளது பாராட்டுக்குரிய சாதனையாகும்.

மலைவாழ் இன ஏழை குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஆ.ராஜேஸ்வரியின் தந்தை கடந்த 2023-ல் உடல்நல குறைபாடு காரணமாக இறந்துவிட்டார். தாயார் திருமதி.ஆ.கவிதா, அக்கா ஜெகதீஸ்வரி, அண்ணன் ஸ்ரீ கணேஷ் ஆகியோருடன் கருமந்துறை மலைப்பகுதியில் வசித்து வருகிறார்.

சிறுவயதிலிருந்தே படிப்பில் சிறந்து விளங்கிய மாணவி ஆ.ராஜேஸ்வரி 10ஆம் வகுப்பில் 438 மதிப்பெண்களும், 12ஆம் வகுப்பில் 600க்கு 521 மதிப்பெண்களும் பெற்று தேர்ச்சியடைந்துள்ளார். ஆ.ராஜேஸ்வரி தனது பள்ளி தலைமை ஆசிரியர் வழிகாட்டுதலின்படி பழங்குடியின நலத்துறையின் சிறப்பு வகுப்புகளிலும், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் செயல்பட்டு வரும் அரசு பயிற்சி மையத்திலும் சேர்ந்து உயர்கல்வி நுழைவுத் தேர்விற்கு தயாராகி வந்தார்.

இந்நிலையில் JEE Mains & JEE Advance தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அகில இந்திய அளவில் 417 - வது இடத்தில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் பயில தகுதி பெற்றுள்ளார்.

மேலும் JEE Advanced தொடர்பான கவுன்சிலிங்கிற்காக தற்போது குமிழி ஏகலைவா உண்டி உறைவிட மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பழங்குடியினர் நலத்துறை மூலம் வாசுகி பவுண்டேசன் மூலம் நடத்தப்படும் உயர்கல்விக்கான பயிற்சி பெற்று வருகிறார். இவர் சென்னை ஐ.ஐ.டி.யில் Aerospace Engineering பாடப்பிரிவில் உயர்கல்வி பயில விருப்பம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவி ஆ.ராஜேஸ்வரி சென்னை ஐ.ஐ.டி.யில் உயர்கல்வி பயில தகுதி பெற்றுள்ளதை அறிந்தவுடன், ‘மாணவி ஆ.ராஜேஸ்வரிக்கு எனது Salute’ எனப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்து, “அவரது உயர்கல்விச் செலவை தமிழ்நாடு அரசே ஏற்கும்” என அறிவித்தார்.

இதைனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் 12.6.2025 அன்று சேலம் மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது, பழங்குடியின மாணவி ஆ.ராஜேஷ்வரியை நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்து, பழங்குடியினர் நலத்துறையின் தொல்குடித் திட்டத்தின் கீழ் ரூ.5.73 இலட்சம் மதிப்பிலான வீடு ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையினையும், உயர்கல்வி பயில்வதற்கு உதவிடும் வகையில் ரூ.70,000 மதிப்பிலான மடிக்கணினியையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

பழங்குடியின மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைக்கு முத்தாய்ப்பாக மாணவி ராஜேஷ்வரியின் சாதனை அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாணவி ஆ.ராஜேஸ்வரி நன்றி!**

முதலமைச்சர் அவர்கள் நான் IIT- ல் பயில தகுதி பெற்றுள்ளயொட்டி எனக்கு வாழ்த்து தெரிவித்து மேற்படிப்பிற்கான செலவுகளை அரசே ஏற்கும் என அறிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், 12.6.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னை நேரில் அழைத்து பாராட்டி, எனது உயர்கல்விக்கு உதவிடும் வகையில் மடிக்கணினியினை வழங்கியுள்ளார்கள். மேலும் வீடு கட்டிக்கொடுப்பதற்கான ஆணையும் வழங்கியுள்ளார்கள். நன்றாக பயின்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பேன் என இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், தந்தை இல்லாத எனக்கு தந்தையாக எனது உயர் கல்விச் செலவை ஏற்பதும், வீடு வழங்கியுள்ளதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

---

## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென்று வெறும் திட்டங்கள் மட்டும் அறிவிப்பு!

# வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வதுதான் ஒன்றிய அரசின் வேலை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, ஜூன் 15 -* ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கென்று வெறும் திட்டங்களை மட்டும் அறிவித்து விட்டு அதை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமல் வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வது தான் ஒன்றிய அரசின் வேலையாக உள்ளது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்
ஜூன் 14, 2025 சனிக்கிழமை
வாய்ச்சொல் ஜாலங்கள்

அது வருமாறு:-

திட்டங்களை நிறைவேற்ற தேவையான வருவாயை பெருக்குவதற்கான அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் குறைவாகவே உள்ளன. மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்ககூடிய வரி வருவாய் பங்கினை ஒன்றிய அரசு குறைத்து வழங்குவதால் மாநில அரசுகளால் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் சிரமங்கள் இருந்து வருகிறது. பொதுவாக ஒரு கூட்டாட்சி அரசு என்றால், வளங்களை பங்கிட்டுக் கொள்வது என்பதுதான் அடிப்படை அம்சமாகும். அந்த பங்கீடு அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக இருக்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு அவ்வாறு சமமாக பங்கிட்டு வழங்குவதில்லை.

பாஜ ஆளும் மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு தெரிவிக்கும் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் கூடுதல் நிதியையும், எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு குறைவான நிதியையும் வழங்கி வருகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களை முற்றிலும் வஞ்சிப்பது என்பது ஒன்றிய அரசின் எழுதப்படாத விதியாக உள்ளது. தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு போதுமான நிதி ஒதுக்குவதில்லை என்ற பிரச்னையைவிட தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் நேரடி திட்டங்களுக்குகூட நிதி ஒதுக்கீடு செய்வது இல்லை என்பது தான் இங்கே பிரச்னையே.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று வெறும் திட்டங்களை மட்டும் அறிவித்துவிட்டு அதை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஏதோ ஒன்றிய அரசின் மொத்த வருவாயையும் தமிழ்நாட்டிற்கே வாரி வழங்குவது போல வெறும் வாய்ச்சொல் ஜாலங்கள் செய்வது தான் ஒன்றிய அரசின் வேலையாக இருந்து வருகிறது. இதற்கு சிறந்த உதாரணம் சொல்ல வேண்டுமெனில், மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி திட்டம். ஒன்றிய அரசால் இத்திட்டம் அறிவிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிவிட்டது.

ஆனால் ஒற்றை செங்கல் கூட அங்கு கிடையாது. இதைத்தான் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் நடந்த அரசு விழாவில் பேசுகையில், “மதுரையில் 10 ஆண்டாக பணி நடப்பது எய்ம்சா அல்லது விண்வெளி நிலையமா?” என்று கேள்வி எழுப்பி உள்ளார். இது போல சென்னை மெட்ரோ ரயில் புதிய ரயில்வே திட்டம், குடிநீர் திட்டம், வீடு கட்டும் திட்டம், பெஞ்சல் புயல், மிக்ஜாம் புயல் நிவாரணம் என பலவற்றுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதில்லை.

அதிலும் குறிப்பாக பேரிடர் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழக்கமாக கொடுக்க வேண்டிய நிதியைகூட கொடுப்பதில்லை என்பது குற்றச்சாட்டாக உள்ளது. தேசியக் கல்விக் கொள்கையின்படி மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் தமிழ்நாடு பள்ளி கல்விக்கான நிதி ஒதுக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பகிரங்கமாகவே அறிவிக்கிறார். நாட்டின் பொதுச்செலவினத்தில் 62.4 சதவீதம் மாநிலங்களுக்கானது. ஆனால் மொத்த வருவாயில் 37.3 சதவீதம் மட்டுமே தற்போது கிடைக்கிறது.

63 சதவீத நிதியை ஒன்றிய அரசே வைத்துக் கொள்கிறது. குறிப்பாக மத்திய வருவாயில் 41 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற 15வது நிதிக் குழுவின் பரிந்துரை முழுமையாக செயல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் ஒன்றிய பாஜ அரசு தனது கொள்கைகளை நிலைநாட்ட சிந்தாந்த ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் தாக்குவதற்கு வசதியாக பொருளாதார உத்தியை கையாண்டு வருகிறதோ என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# வேலூர் மாநகர தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*வேலூர், ஜூன் 15 -* வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேலூர் மாநகர தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம் மாநகர அவைத்தலைவர் சூரி (எ) கோவிந்தன் தலைமையில் தலைமையில் நாளை (16.06.2025 திங்கட்கிழமை) மாலை 6.00 மணி அளவில் வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், மாநகரத்திற்கு உட்பட்ட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

முதல்வர் கழக தலைவர் அவர்கள் வேலூர் வருகைக்குறித்து

கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி வடக்கு, திண்டுக்கல் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.30 மணி | தூத்துக்குடி வடக்கு | கலைஞர் அரங்கம், எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி. |
| | மாலை 4.00 மணி | திண்டுக்கல் மேற்கு | அபூர்வா ஹால், ஒட்டன்சத்திரம். |
| | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், ஸ்ரீ வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூரு பிரதான சாலை, கிருஷ்ணகிரி. |
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஒசூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 13-06-2025

கலைஞர் 100 1924 - 2023


**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

## ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019



# செம்மண்ணின் பகுத்தறிவு சுடரே!

பெரியவர் **எஸ்.சிவசுப்ரமணியன்** M.A.,B.L., அவர்கள்
முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்

**ஆர்.கலியபெருமாள்** B.E.,
ஒன்றிய கழக பொறுப்பாளர் - ஆண்டிமடம் (தெற்கு)
அரியலூர் மாவட்டம்